இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 167 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – தை 14 – புதன்கிழமை 28 ஜனவரி 2026 – சென்னை 16 + 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 84 - Issue 167: Thiruvalluvar Year - 2057 - Thai 14 - Wednesday 28 January 2026 - Chennai 16+8 Pages ₹ 5.00




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.01.2026) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில், உலக மகளிர் உச்சி மாநாடு 2026 தொடக்க விழாவில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், அண்ணல் அம்பேத்கர் தொழில் முனைவோர் திட்டம், தாட்கோவின் CM ARISE திட்டம், கலைஞர் கைவினைத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் கீழ் மகளிர்க்கு தொழில் தொடங்கி கடனுதவிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், கீதாஜீவன், மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மற்றும் பல்வேறு சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.01.2026) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில், உலக மகளிர் உச்சி மாநாடு 2026 தொடக்க விழாவில், ”நான் முதல்வன் திட்டத்தின் கீழ் திறன் பயிற்சி பெற்ற மாணவிகளுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், கீதாஜீவன், மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மற்றும் பல்வேறு சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கல்வி கற்க – சுதந்திரமாக வாழ – மரியாதையான ஊதியம் பெற – தொழில் முனைவோர்களாக மாற – என

# பெண்களின் முன்னேற்றத்திற்குரிய கட்டமைப்பை இந்த அரசு உருவாக்கும்!

## உலக மகளிர் உச்சி மாநாட்டில்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, ஜன.28**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.1.2026) சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற “உலக மகளிர் உச்சி மாநாடு 2026“-ஐ தொடங்கிவைத்து, உரையாற்றுகையில், “ கல்வி கற்க – சுதந்திரமாக வாழ – மரியாதையான ஊதியம் பெற - தொழில் முனைவோர்களாக மாற - என பெண்களின் முன்னேற்றத்திற்குரிய கட்டமைப்பை இந்த அரசு உருவாக்கும்!” என்று உறுதிபடக் குறிப்பிட்டார்.‘**

**இவ்விழாவில் முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

இந்த உலக மகளிர் உச்சி மாநாட்டில் கலந்துகொண்டிருக்கும் உங்கள் எல்லோரையும் பார்க்கும்போது, மகிழ்ச்சியாகவும், பெருமையாகவும் இருக்கிறது! இன்றைக்கு இந்தியாவிலேயே பெண்கள் அதிகம் வேலைக்கு செல்லும் மாநிலமாக நம்முடைய தமிழ்நாடுதான் இருக்கிறது! புதிதாக எந்த நிறுவனம் தமிழ்நாட்டில் தொழில் தொடங்க முன்வந்தாலும் இது மூலமாக பெண்கள் எத்தனை பேருக்கு வேலை கிடைக்கும்? என்று கேட்பது தான் என்னுடைய முதல் கேள்வியாக இருக்கும். அதுதான் என்னுடைய வழக்கமாக இருந்துகொண்டிருக்கிறது!

### உயர் பொறுப்புகளில் பெண்கள் வர வேண்டும்!

இப்போது, பல தனியார் நிறுவனங்களில் இத்தனை பர்செண்ட் பெண் தொழிலாளர்களுக்கு என்று ஒதுக்க ஆரம்பித்துவிட்டார்கள். ஆனால், பெண்கள் அதிகமாக வேலைக்கு செல்வதிலேயே நாம் திருப்தி அடைந்துவிடக் கூடாது! ஆண்களுக்கு இணையாக பெண்கள் வெளியே வர வேண்டும்! இன்னும் அதிகமாக வர வேண்டும். புதிதாக வளர்ந்து வரும் துறைகளில் பெண்கள் இடம்பெற வேண்டும்! உயர் பொறுப்புகளில் ஆண்களுக்கு சரிசமமாக பெண்கள் இருக்க வேண்டும்! அதற்காகத்தான், ஆயிரத்து 185 கோடி ரூபாய் உலக வங்கியின் உதவியுடன், இந்த ‘தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்பு’ திட்டத்தை தொடங்கியிருக்கிறோம்! இந்த 2 நாள் மாநாட்டில் விவாதிக்கப்படும் கருத்துகளும், அதனால் உருவாகப்போகும் ஆக்கப்பூர்வமான சிந்தனைகளும் நம்முடைய இலக்கை அடைய துணை நிற்கும் என்று நான் நம்புகிறேன்!



பெண்கள்தான், இந்தச் சமூகத்தின் முதுகெலும்பு! மக்கள்தொகையில் சரிபாதியாக இருக்கும் பெண்கள் முன்னேறாமல், எந்த நாடும் வளர முடியாது! தந்தை பெரியார் அவர்கள், நூறாண்டுகளுக்கு முன்பே வலியுறுத்திய கருத்து இது! அவர் வழியைப் பின்பற்றி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பெண்கள் முன்னேற்றத்திற்கான ஏராளமான திட்டங்களை செயல்படுத்தினார்!

### பெண்கள் முன்னேற்றத்தைக் காண அரசின் திட்டங்கள்!

குடும்பச் சொத்தில் பெண்களுக்கு சம வுரிமை –காவல்துறையில் பெண் காவலர்கள் - கிராமப்புற பெண்களும் மேன்மை அடைவதற்கு அடித்தளமான மகளிர் சுய உதவிக்குழுக்கள் – அரசியல் பங்கேற்பில் பெண்களுக்கான பிரதிநித்துவத்தை உறுதிசெய்ய, உள்ளாட்சிகளில் இடஒதுக்கீடு! என்று நீண்ட பட்டியலே போட முடியும்!

அடுத்து, இப்போது நம்முடைய திராவிட மாடல் அரசிலும், பெண்களின் சமூக பங்களிப்பை அதிகரிக்க வேண்டும் என்று இதுவரை இல்லாத அளவுக்கு பல திட்டங்களை செயல்படுத்திகொண்டு இருக்கிறோம்! அதில் முதன்மையானது, பேருந்துகளில் கட்டணமில்லா விடியல் பயணம்! இதன் மூலமாக பெண்களின் பயணங்கள் அதிகரித்திருக்கிறது.

அடுத்து, பெண்கள் டிகிரி பெறுவதை உறுதி செய்யும் புதுமைப்பெண் திட்டம்! படித்து முடிக்கும் வரை மாதம் ஆயிரம் ரூபாய் கிடைப்பதால், கல்லூரிக்கு வரும் பெண்களின் எண்ணிக்கை அதிகமாகி இருக்கிறது. அதுவும் குறிப்பாக, BC, MBC, SC, ST சமுதாய மாணவிகள் இந்த திட்டத்தில் அதிகமாக பயனடைகிறார்கள்.

படித்து முடிந்ததும் வேலை கிடைக்க அதற்காக திறன் பயிற்சிகள் வழங்க நான் முதல்வன் திட்டம். அந்த திட்டத்தின் வெற்றியை இங்கு பேசிய முஸ்லீம் மாணவி சொன்னாரே... அவர்கள் பேசும்போது எனக்கு அவ்வளவு பெருமையாக இருந்தது. மகிழ்ச்சியாக இருந்தது.

### பெண்களின் பாதுகாப்பிற்கு தோழி விடுதிகள் திறப்பு!

அதேபோல், வேலைக்கு செல்லும் இடத்தில் பாதுகாப்பாக தங்குவதற்கு விடுதிகள் வேண்டுமென பல்வேறு இடங்களில் தோழி விடுதிகள் திறக்கப்படுகிறது.

அதேபோல், என்னதான் பெண்கள் வீட்டிலேயே முடங்கிவிடாமல் வெளியே வரத் தொடங்கினாலும், அவர்களுக்கு இருக்கக்கூடிய பெரிய சிரமம் என்னவென்றால், சமையல்! நம்முடைய அரசின் காலை உணவுத் திட்டத்தால் அந்த பாரமும் இப்போது குறைந்திருக்கிறது! மாணவர்களுக்கு பள்ளிகளிலேயே நல்ல தரமான உணவு கிடைப்பதால், மகளிர் நிம்மதியாக காலையில் வேலைக்கு செல்கிறார்கள்.

TN-ரைஸ் உள்ளிட்ட பல்வேறு முன்னெடுப்புகள் மூலமாக, கிராமப்புற பகுதிகள் வரை பெண் தொழில்முனைவோர்களை உருவாக்கி இருக்கிறோம்! அதுவும், பெண்கள் தலைமையேற்று நடத்தும் ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் பல மடங்கு அதிகரித்திருக்கிறது!

இங்கு பேசிய வேலூரைச் சார்ந்த சகோதரி எவ்வளவு கம்பீரமாக சொன்னார்கள். அவர்கள் தன் தொழிலை வெளிநாடுவரை விரிவடைய செய்திருக்கிறார்.

இவையெல்லாவற்றிற்கும் மகுடம் வைத்தது போன்று இந்த அரசின் முத்திரைத் திட்டம்! அதுதான், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்! 1 கோடியே 30 இலட்சம் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் உரிமைத்தொகை என்பது, இதுவரை யாரும் செய்யாத வரலாற்றுச் சாதனை! இன்றைக்கு இந்தியாவில் இருக்கும் மற்ற மாநிலங்களும் நம்மைப் பார்த்து பின்பற்றி வரும் சாதனை! பெண்களின் சுயமரியாதை, பொருளாதார சுதந்திரம், தன்னம்பிக்கை ஆகியவை உரிமைத்தொகையால் கூடியிருக்கிறது!

### நோய் தீர்க்கும் மருத்துவர்கள்!

இப்படி பெண்களின் முன்னேற்றம் ஒரு பக்கம் என்றால், பெண்களின் உடல் நலனுக்காகவும் நிறைய திட்டங்களை செய்துகொண்டு இருக்கிறோம். அதில் சிறப்பான திட்டம் இன்று என்னால் தொடங்கி வைக்கப்பட்டிருக்கக்கூடிய கருப்பை வாய் புற்றுநோயை தடுக்க, 14 வயதுடைய பெண் குழந்தைகளுக்கு HPV தடுப்பூசியை அரசே செலுத்துவது தான்!

கடந்த ஆண்டு பட்ஜெட்டில் இதை அறிவித்து அதற்காக 36 கோடி ரூபாய் ஒதுக்கினோம். பல பெண் மருத்துவர்கள் சோஷியல் மீடியாவில் இந்த திட்டத்தை வரவேற்றுப் பாராட்டி எழுதியிருந்தார்கள். 3 இலட்சத்து 38 ஆயிரத்தி 649 பெண் குழந்தைகளுக்கு இந்த தடுப்பூசி செலுத்தப்பட இருக்கிறது.

> **மகளிர் நலன்காக்கும் நம்முடைய அரசின் திட்டங்களின் நீட்சியாகதான் இந்த “TN–WE–SAFE” திட்டம் அமைந்திருக்கிறது! வளர்ந்து வரும் துறைகளில் பெண்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதை மட்டும் இந்த திட்டம் செய்யவில்லை! அப்படி அவர்கள் வேலைக்குச் செல்ல வேண்டும் என்றால் குழந்தைகள், வயதானவர்களைக் கவனித்துக்கொள்ளும் பொறுப்பை யாராவது எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த நடைமுறைச் சிக்கலை உணர்ந்து, குழந்தை பராமரிப்பு, முதியோர் பராமரிப்பு, பாதுகாப்பான தங்குமிடங்கள் என்று அதற்கான ஆதரவு சேவைகளையும் இந்தத் திட்டம் வழங்குவது பாராட்டுக்குரியது!**

**தொடர்ச்சி 3ஆம் பக்கம்**